செ.வெ.எண். 06/நவம்பர் தேதி : 03.11.2016

# மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தருமபுரி பிரிவு சார்பாக 2016-17ம் ஆண்டிற்கான மாவட்ட அளவில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு **18.11.2016 மற்றும் 19.11.2016** ஆகிய தேதிகளில் கீழ்கண்டவாறு மாவட்ட விளையாட்டரங்கம், தருமபுரியில் நடைபெறவுள்ளது.

மாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெறும் விவரம்

| | நடைபெறும் போட்டிகள் விவரம் | போட்டிகள் நடைபெறும் நாள் |
|---|---|---|
| நீச்சல் | **ஆண்களுக்கான நீச்சல் போட்டிகள்**<br>100மீ பேக் ஸ்டிரோக், 100மீ பிரஸ்ட் ஸ்டிரோக், 100மீ பட்டர்பிளை, 200மீ பட்டர்பிளை, 200மீ பேக் ஸ்டிரோக், 200மீ பிரஸ்ட் ஸ்டிரோக், 400மீ இன்டிஜுவல் மெட்லே, 1500மீ ப்ரி ஸ்டைல்<br>**பெண்களுக்கான நீச்சல் போட்டிகள்**<br>100மீ பேக் ஸ்டிரோக், 100மீ பிரஸ்ட் ஸ்டிரோக், 100மீ பட்டர்பிளை, 200மீ பட்டர்பிளை, 200மீ பேக் ஸ்டிரோக், 200மீ பிரஸ்ட் ஸ்டிரோக், 400மீ இன்டிஜுவல் மெட்லே, 800மீ ப்ரி ஸ்டைல் | 18.11.2016 |
| குத்துச்சண்டை, | **ஆண்கள்** - 49 கி.கி, 49-52 கி.கி, 52-56 கி.கி, 56-60 கி.கி, 60- 64 கி.கி, 64 -69 கி.கி, 69-75 கி.கி, 75-81 கி.கி, 81-91 கி.கி, மற்றும் 91 கி.கி - க்கு மேல்<br>**பெண்கள்** - 48 கி.கி, 48-51 கி.கி, 51-54 கி.கி, 54-57 கி.கி, 57-60 கி.கி, 60-64 கி.கி, 64-69 கி.கி, 69-75 கி.கி, 75-81 கி.கி மற்றும் 81 கி.கி க்கு மேல் | 18.11.2016 |
| வாள்சண்டை, | **ஆண்கள்** - தனிநபர் பாயில், குழு பாயில், தனிநபர் எபி, குழு எபி, தனிநபர் சேபர், குழு சேபர்<br>**பெண்கள்** - தனிநபர் பாயில், குழு பாயில், தனிநபர் எபி, குழு எபி, தனிநபர் சேபர், குழு சேபர் | 18.11.2016 |
| கைப்பந்து (ஹேண்ட்பால்) | குழு போட்டிகள் | 18.11.2016 |
| பளுதூக்குதல் | **ஆண்கள்** - 56 கி.கி, 62 கி.கி, 69 கி.கி, 77 கி.கி, 85 கி.கி, 94 கி.கி, 105 கி.கி, மற்றும் 105கி.கி க்கு மேல்<br>**பெண்கள்** - 48 கி.கி, 53 கி.கி, 58 கி.கி, 63 கி.கி, 69 கி.கி, 75 கி.கி, மற்றும் 75 கி.கி க்கு மேல் | 18.11.2016 |
| தடகளம் | **ஆண்களுக்கான தடகள போட்டி விபரம்:**<br>100 மீ, 200 மீ, 400 மீ, 400 மீ தடை தாண்டி ஓட்டம்இ 1500 மீ, 10000 மீ, கம்பு ஊன்றி தாண்டுதல், நீளம் தாண்டுதல், சங்கிலி குண்டு எறிதல், ஈட்டி எறிதல்<br>**பெண்களுக்கான தடகள போட்டி விபரம்:**<br>100 மீ, 200 மீ, 800 மீ, 1500 மீ, 5000 மீஇ 400 மீ தடை தாண்டி ஓட்டம், கம்பு ஊன்றி தாண்டுதல், நீளம் தாண்டுதல், சங்கிலி குண்டு எறிதல், ஈட்டி எறிதல் | 19.11.2016 |
| ஜிம்னாஸ்டிக்ஸ் | **ஆண்கள்**- புளோர் எக்சர்சைஸ், பொம்மல் ஹார்ஸ், பேரலல் பார்ஸ், ஹரிஜான்டல் பார்ஸ் மற்றும் ரிங்ஸ்<br>**பெண்கள்** - புளோர் எக்சர்சைஸ், அன் ஈவன் பார்ஸ் மற்றும் பீம் | 19.11.2016 |
| ஜூடோ | **ஆண்கள்** - 60 கி.கி, 66 கி.கி, 73 கி.கி, 81 கி.கி, 90 கி.கி, 100 கி.கி மற்றும் 100 கி.கி க்கு மேல்<br>**பெண்கள்** - 48 கி.கி, 52 கி.கி, 57 கி.கி, 63 கி.கி, 70 கி.கி, 78 கி.கி மற்றும் 78 கி.கி க்கு மேல் | 19.11.2016 |
| டேக்வாண்டோ | **ஆண்கள்** - 50 கி.கி வரை 50-54 கி.கி, 54-58 கி.கி, 58-63 கி.கி, | 19.11.2016 |

| | | |
|---|---|---|
| | 63-68 கி.கி, 68-73 கி.கி, 73-78 கி.கி, 78 கி.கி க்கு மேல்<br>**பெண்கள்** 43 கி.கி வரை, 43-46 கி.கி, 46-49 கி.கி, 49-53 கி.கி, 53-57 கி.கி, 57-62 கி.கி, 62-67 கி.கி, 67 க்கு மேல் | |
| கடற்கரை கையுந்துபந்து | குழு போட்டிகள் | 19.11.2016 |

மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் 3 இடங்களைப்பெறும் வீரர்/வீராங்கனைகளுக்கு முறையே தலா ரூ.1000/-, ரூ.750/-, ரூ.500/- பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் 21 வயது பூர்த்தி அடையாதவராக இருத்தல் வேண்டும். (01.01.1996 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்திருக்க வேண்டும்) மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்/வீராங்கனைகள் தமிழகத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் வசிப்பவர்க்கான இருப்பிடச் சான்றிதழ் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும். 21 வயது பூர்த்தி அடைந்த வீரர்/வீராங்கனைகள் எக்காரணம் கொண்டும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் சொந்த மாவட்டத்திற்காகவோ/பணிபுரியும் மாவட்டத்திற்காகவோ/பள்ளி, கல்லூரியில் பயிலும் மாவட்டத்திற்காகவோ விளையாட அனுமதிக்கப்படுவார்கள். அதற்குரிய அசல் ஆதாரங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் கலந்து கொள்ள 14.11.2016க்குள் அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட விளையாட்டரங்கம் தருமபுரியில் தங்கள் பெயரினை பதிவு செய்து கொள்ள வேண்டும். அதற்கான நுழைவு படிவத்தினை மாவட்ட விளையாட்டரங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது www.dharmapuri.nic.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் 1077 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு பெயர் முகவரி மற்றும் விளையாட்டு மற்றும் தங்களின் கைபேசி எண் ஆகியவற்றை பதிவு செய்து கொள்ளலாம்.

மாவட்ட அளவிலான முதலமைச்சர் போட்டிகளில் கலந்து கொள்ள பெயரினை பதிவு செய்யும் போது இருப்பிடச் சான்றிதழ், வயதுச் சான்றிதழ், குடும்ப அட்டை, பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல் சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டும். பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகள் தங்கள் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பம், அலுவலக முத்திரை, மற்றும் பிறந்த தேதியுடன் கூடிய நுழைவு படிவத்தினை 14.11.2016 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் 14.11.2016 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் சமர்ப்பிக்கும் நுழைவு படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் நேரடி நுழைவு அனுமதிக்கப்படமாட்டாது. ஒரு வீரர்/வீராங்கனைகள் மற்றும் அணிகள் ஒரு விளையாட்டில் மட்டுமே கலந்து கொள்ள அனுமதி அளிக்கப்படும். தடகள போட்டிகளில் ஒரு வீரர்/வீராங்கனைகள் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் முதலிடம் பெறும் வீரர்/வீராங்கனைகள் மற்றும் அணிகள் மட்டுமே மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

எனவே தருமபுரி மாவட்டத்தில் உள்ள 21 வயதிற்குட்பட்ட விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி **18.11.2016 மற்றும் 19.11.2016** ஆகிய தேதிகளில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.